செ.வெ.எண் : 05 நாள் : 02.03.2021

## சட்டமன்ற பொதுத் தேர்தல் - 2021

## மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்களின் செய்திக்குறிப்பு

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (02.03.2021) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தலைமையில் திருமண மண்டபம் மற்றும் தனியார் விடுதி உரிமையாளர்கள் மற்றும் மேலாளர்களுடன் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021 தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

**மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்ததாவது:**

சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021 நடைபெறுவதையொட்டி தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள திருமண மண்டபம் மற்றும் தனியார் விடுதி உரிமையாளர்கள் அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்கள் சார்பில் கூட்டம் நடத்தினால் அத்தகவலை முன்கூட்டியே மாவட்ட நிர்வாகம் மற்றும் தேர்தல் பிரிவில் தெரிவிப்பதோடு பட்டியல் தொகை தகவலையும் அளிக்க வேண்டும். வாக்குப்பதிவு நடைபெறும் 48 மணி நேரத்திற்கு முன்பு வெளி மாநிலம் மற்றும் வெளி மாவட்டங்களைச் சார்ந்த நபர்கள் தங்களது திருமண மண்டபத்தில் தங்க வைக்க அனுமதி வழங்க கூடாது. மேலும், தேர்தல் தொடர்பான சந்தேகங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக தேர்தல் பிரிவில் கேட்டு தெளிவுபடுத்தி கொள்ளலாம்.

எனவே, நடைபெறவுள்ள சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021 அமைதியான முறையில் நடத்திட திருமண மண்டபம், தனியார் விடுதி உரிமையாளர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ரெ.சதீஸ், வட்டாட்சியர் (தேர்தல்) திரு.ஜெய்சங்கர், திருமண மண்டப உரிமையாளர்கள், மேலாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**